Registered as a Newspaper    பக்கங்கள் 4    விலை ரூபா 5-00

நல்லூர் இ... நூலகம் ...மன்றம் யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 05    திருவள்ளுவர் ஆண்டு 2025    மாசி 8    (20.02.94)    ஞாயிற்றுக்கிழமை    ஓசை 02

## வெளிநாட்டுத் தபால்கள் உடைப்பதை நிறுத்த மறுப்பு

கொழும்பில் தேங்கிக் கிடந்த யாழ். மாவட்டத்திற்கான உள்நாட்டு, வெளிநாட்டு தபால்கள் அனைத்தும் எடுத்து வரப்பட்டு விட்டதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. சுமார் நான்கு மாத காலமாக தேங்கிக் கிடந்த இத்தபால் பொதிகள் இரண்டு கட்டங்களில் எடுத்து வரப்பட்டு விட்டதாக வடமாகாண அஞ்சல் அதிபர் நாயகம் எஸ். எம். சேதுகாவலர் கூறினார். மேலும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்க, தபால், தந்தி அமைச்சின் செயலாளர் அசோக குணசேகர, மற்றும் அஞ்சல்மா அதிபர் நாயகம் டி. திசாநாயக்கா ஆகியோருடன் நடத்திய பேச்சுகளின் போது தபால்கள் உடைக்கப்படுவது (4ஆம் பக்கம் பார்க்க)

# பௌத்தர்களை மதம் மாற்றுவோருக்கு டி. பி. விஜேதுங்கா கடும் எச்சரிக்கை!

## சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார்

(கொழும்பு)

பௌத்த மதத்தினரை மதம் மாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கடுமையாக எச்சரித்துள்ளார் இது ஒரு சர்வதேசச் சூழ்ச்சி எனக் குறிப்பிட்டுள்ள அவர் விரைவில் இதற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். அண்மைக்காலமாக பௌத்த பிக்குகள் கிறிஸ்தவ அமைப்புக்கள் பௌத்தர்களை மதம்மாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாகக் குற்றம் சாட்டி வந்தமை குறிப்பிடத்தக்கது.

பௌத்த மக்களை மதம் மாற்றச் செய்ய இன்று முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம் முயற்சிகளுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது. பௌத்தத்தின் மேன்மையை கெடுக்கும் நோக்கம் கொண்ட சர்வதேசச் சூழ்ச்சி உள்ளூர் சக்திகளை ஊக்குவித்து வருகிறது. இவ்வாறு பௌத்த சாசன அமைப்பின் காப்பாளர் சபை கூட்டத்தில் உரையாற்றும்போது ஜனாதிபதி தெரிவித்தார்.

பௌத்த சாசன அமைச்சு பௌத்த மதத்தைப் பாதுகாத்து வருகின்றது. மகாசங்கத்தினரின் நலன்களையும் பேணிப்பாதுகாக்கின்றது. நாட்டில் தகராறுகளை ஏற்படுத்தும் ஒரு சர்வதேசச் சூழ்ச்சி மூலம் உள்ளூர் சக்திகள் ஊக்குவிக்கப்படுகின்றன. இது பௌத்தத்தின் மேன்மையை கெடுப்பதை நோக்கமாக கொண்டது என்பது தெளிவு.

பௌத்த மக்களை மதம் மாற்றும் நடவடிக்கைகளுக்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மக்கள் மத்தியில் உள்ள வறுமை, படிப்பறிவின்மை என்பன இவற்றுக்கு ஆதாரமாக அமைகின்றது. இம் முயற்சிகளுக்கு எதிராக வெளிநாடுகளில் எவ்வாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என வெளிவிவகார அமைச்சு ஆராய்ந்து வருகின்றது என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.



ஈழநாதம் நான்காம் ஆண்டு நிறைவுப்போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களைப் பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நேற்றுக்காலை ஈழநாதம் நிறுவனத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் திரு கரிகாலன் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார். இந்நிகழ்வில் சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற திரு. ப. கேதீஸ்வரநாதனுக்கு திரு. கரிகாலன் பரிசில் வழங்கி கௌரவிப்பதை மேலுள்ள படத்தில் காணலாம்.

# சுயேட்சை தேர்தல் ஆணைக்குழு சிறிலங்காவில் உருவாக்க வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ கோரிக்கை

(கொழும்பு)

இந்தியாவில் உள்ள சுயேட்சையான தேர்தல் ஆணைக் குழுவைப் போன்று சிறிலங்காவிலும் உருவாக்கப்பட ...

சிறிலங்காவில் பூரண அதிகாரம் கொண்ட தேர்தல் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று இதுவரை காலமும் தனிப்பட்ட முறை ... போது தனது கருத்தை வெளியிட்டுள்ளார்.

தேர்தல் அலுவலக கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசிய ஜனாதிபதி டி. பி.

# புலிகளுக்கு எதிரான பக்கத்திற்கு

(கொழும்பு)

இந்தியாவில் உள்ள சுயேட்சையான தேர்தல் ஆணைக் குழுவைப் போன்று சிறிலங்காவிலும் உருவாக்கப்பட வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிறிலங்காவில் பூரண அதிகாரம் கொண்ட தேர்தல் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று இதுவரை காலமும் தனிப்பட்ட முறையில் தனது கருத்தை வெளியிட்டு வந்த சிறிமாவோ முதன் முறையாக வெளிப்படையாக புதிய தேர்தல் அலுவலகம் திறப்பு விழாவின் போது தனது கருத்தை வெளியிட்டுள்ளார்.

தேர்தல் அலுவலக கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசிய ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா தற்போதைய தேர்தல் முறையில் தான் நம்பிக்கை கொண்டிருப்பதாகக் கூறினார்.

ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

படத்தில் காணலாம்.

# புலிகளுக்கு எதிரான யுத்தத்திற்கு புதிய தந்திரோபாயம் தயாராகின்றது

## புதிய விமானப்படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்திற்கு புதிய தந்திரோபாயங்கள் வகுக்கப்படுவதாக சிறிலங்கா புதிய விமானப்படைத்தளபதி ஏயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க தெரிவித்துள்ளார். கடந்த 17ஆம் திகதி விமானப்படை தளபதியாக பதவி ஏற்ற ஏயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க விமானப்படை தலைமையகத்தில் நடைபெற்ற அணிவகுப்பு மரியாதையை ஏற்ற பின்பு பத்திரிகையாளர்களிடையேபேசுகையில்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விமானப்படைக்கு இது தொடர்பாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் நுட்ப பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. யுத்தத்திற்கு பிரயோகிக்கவுள்ள புதிய தந்திரோபாயங்கள் விமானப்படையின் முகாமைத்துவப் பிரிவின் ஆலோசனையுடன் வகுக்கப்படுகிறது. யுத்தப்பகுதிகள் இனிமேல்

(4ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சுவார்த்தைகளை நல்லதிட்டத்துடன் தொடங்கவேண்டும்

## வெற்றிக்கு வழி அதுவே என்கிறார் சட்டத்துறைப் பேராசிரியர்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் வெற்றியீட்டுவதானால், நல்ல திட்டங்களை முன்வைத்து பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என கொழும்புப் பல்கலைக் கழக சட்டத்துறைப் பேராசிரியர் அரவிந்த இகலகம தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், வடக்கு - கிழக்குப் பிரச்சினையை யுத்தத்தினால் தீர்க்க முடியாதநிலை இன்று தோன்றியுள்ளது. உலகிலேயே முதன்மை கெரில்லா அணியாக விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையே இதற்குக் காரணமாகும்.

உலகில் எந்தவொருநாடும் தனது தேசியப்பிரச்சினையை யுத்தத்தினால் தீர்த்து வைக்க முடியாது. இந்தஅனுபவத்தை மனதில் கொண்டு மிகவும் தீர்க்க தரிசனத்துடன் அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கானசூழ்நிலையை உருவாக்க வேண்டும். சமாதானப்பேச்சுவார்த்தைகளில் நல்ல பெறுபேறுகளைப்பெறுவதானால் நல்ல திட்டங்களை முன்வைத்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும். இதுவே பேச்சுவார்த்தைக்கான பலமான அத்திவாரமாக அமைய முடியும்.

இவ்வாறான பேச்சுக்களில் கலந்து கொள்ள வேண்டியவர்கள் யார்? எந்த அடிப்படையிலான பேச்சுக்கள் நன்மை தரும் என்பது தொடர்பாக புத்திஜீவிகளாகிய நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

சமாதான பேச்சுக்கள் அரசியல் தீர்வை நோக்கி நகர்த்தப்பட வேண்டியுள்ளதால் ஜனாதிபதியின் பிரதிநிதி ஒருவர் கலந்து கொள்ள

(4ஆம் பக்கம் பார்க்க)

# உணவு விநியோகத்தை சீராக்குவதற்கு முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்கான அத்தியாவசிய உணவுப்பொருள்களின் கப்பல் மூலமான விநியோகத்தை சீராக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

மேற்படி நடவடிக்கைக்கான முதற்கட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காக யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் கொழும்பு நோக்கி விரைந்துள்ளார்.

கொழும்பு சென்றிருக்கும் திட்டப்பணிப்பாளர் அத்தியாவசிய சேவைகள் பிரிவு உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவார் அதுடன் குடாநாட்டில் தற்போது பற்றாக்குறையாக உள்ள சில அத்தியாவசியப்

(4ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச செஞ்சிலுவை புலிகளுக்கு உதவவில்லை

## யாழ் வதிவிடப் பிரதிநிதி கூறுகிறார்

விடுதலைப்புலிகளுக்குஉதவி வருவதாக தம்மீது பௌத்த தேசாபிமான பிக்கு முன்னணியினர் சுமத்திய குற்றச்சாட்டு தவறானது என சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிட பிரதிநிதி செற்றிக் பிரலா கூறியுள்ளார்.

கடந்த மாத முற்பகுதியில் இந்த பிக்கு முன்னணி இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதியில் செயற்பட்டுவரும் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினரை குற்றஞ் சாட்டி அறிக்கை வெளியிட்டிருந்தது.

# வீரச்சாவு



கப்டன்
சிவச்சந்திரன் (தீசன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 16 ஆம் திகதியன்று மாலை 6 மணியளவில் யானை தாக்கியதில் விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த கப்டன் சிவச்சந்திரன்- தீசன் (தங்கராசாமகேந்திரன் சந்திவெளி மொறக்கொட்டாஞ்சேனை) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

# ஏறாவூர் சுற்றிவளைப்பு; 18 தமிழ் இளைஞர் கைது

ஏறாவூர் பகுதியில் உள்ள பல கிராமங்களில் பொலிஸார் வியாழக்கிழமை அதிகாலை சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினார்கள். பதினெட்டு இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைதாகி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர்.

நூற்றுக்குமதிகமானோர் கைதாகி பின்னர் விடுதலையானார்கள்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள 18 இளைஞர்கள் மீது விசாரணை நடாத்தப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# அநுராதபுர ஆஸ்பத்திரிக்கு 47வைத்தியநிபுணர்மாற்றம்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளில் கடமை புரிந்து வந்த விசேட வைத்திய நிபுணர்கள் 47பேர் அநுராதபுர மாவட்ட அரசினர் ஆஸ்பத்திரிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

வடபகுதி யுத்தமுனைகளில் காயமடையும் இராணுவத்தினருக்கு அவசர சிகிச்சை

(4ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினை தீரும்வரை தற்காலிக விசா வழங்குக!

## மேற்கு நாடுகளிடம் யூ. என். எச். சி. ஆர். கோரிக்கை

(கொழும்பு)

அமெரிக்காவில் அரசியல் தஞ்சம் கோருவோரின் எண்ணிக்கையைக் குறைக்க அந்நாடு நடவடிக்கை எடுக்கவுள்ளது. இதன் ஒருகட்டமாக புகலிடம் பெறுவோரிடமிருந்து 150 டொலர் கட்டணமாக அறவிடவும் வேலைக்கு அனுமதிப்பதற்கான காலத்தைக் குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் மேற்கு நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரும் இலங்கையரை அங்கு இனப்பிரச்சினை தீரும் வரையிலான காலப்பகுதி வரை அவர்களுக்கு தற்காலிக நுழைவுரிமை அனுமதியை வழங்கவேண்டுமென யூ.என். எச். சி. ஆர். வேண்டுகோள் விடுத்துள்ளது. அமெரிக்காவில் அரசியல் தஞ்சம்கோரும் இலங்கையரின் தொகை குறைவு என்பதால் அவர்களுக்கு தற்காலிக நுழைவுரிமை வழங்க அமெரிக்க குடிவரவு குடியகல்வுதிணைக்களம் அனுமதிக்க வேண்டும் எனவும் யூ. என். எச். சி. ஆர். கேட்டுள்ளது.

## வரி விளம்பரம்

**கூந்தல் தைலம்**

ஆயுர்வேதமுறைப்படி தயாரிக்கப்பட்ட கூந்தல் வளர் தைலம், குழந்தைகளுக்கான கிரந்தி எண்ணெய், ஆஸ்மா பீனிசம் என்பவற்றை நீக்கும் மருந்தெண்ணெய் வகைகள் பெற்றுக்கொள்ள முருகானந்தா வைத்திய நிலையம் (அம்மன் கோவில் முன்) மாம்பழம் சந்தி - அரியாலை.
(7555)

**தவறிவிட்டது**

20-12-93 ஆம் திகதி மருதனா மடத்திற்கும் அச்சுவேலிக்கும் இடையில் எனாமல் 'கே' அடையாளம் போட்ட 3/4 பவுண் மோதிரம் தவறிவிட்டது, கண்டெடுத்தவர்கள் க. கனகராசா இராசு வீதி, அச்சுவேலியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (7557)

**விற்பனைக்குண்டு**

இரண்டு ஒற்றை திருக்கல் வில்லு வண்டிகள் விற்பனைக்குண்டு ஒன்று பெரிய ரயர் வண்டில். இரண்டு மாடுகளும் பூட்டலாம் தொடர்பு இல. 17 கோவில் வீதி, (மோட்டார்சைக்கிள் கராஜ் முன்பாக) யாழ்ப்பாணம்.
(7558)

**'நீம்சோப்'**

வேப்பெண்ணெயை ஆதாரமாகக்கொண்ட 'நீம்சோப்' சருமத்திற்கு உகந்தது. கட்டி ஒன்று விலை ரூ. 8/- நீம் சோப் மேலுறை 10 சேர்ப்பித்து வாக்குண்டாம் உரையுடன்கூடிய நீதி நூல் அன்பளிப்பாகப் பெறுங்கள். ''மில்க்வைற்'' (சி-8663)

**சைனீஸ் உணவுசேவை**

மதியஉணவு - மீன், இறைச்சி, முட்டை, மரக்கறி; சைவ உணவு - புரியாணி, பிறைட்றைஸ், நூடில்ஸ் வகை பாசல் ஓடர்களுக்கும்

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

### A/L 94 துரித மீட்டல்

மாலை நேர வகுப்புக்கள்
திங், செவ், வியா, - 4.45 - 6.00

கணக்கியல்:-
**திரு S.K. பிரபாகரன்**

ஆரம்பம்: 21.02.94 திங்கள்
(சி-8669)

---

திக்கெட்டும் செய்திகளை
திகைப்புற வழங்கிடும் ஈழநாதமே
நீ வாழிய பல்லாண்டு!

V

புதிய விஞ்ஞான கல்வி நிலையம்
கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
(சி-8524)

---

வைகறை புலர்ந்தவுடன்
புதினங்கள் சுமந்துவரும்
ஈழநாதமே நீ வாழ்க!

---

5ஆம் ஆண்டில்
கால்பதிக்கும்

ஈழநாதம்
மக்கள் தினசரிக்கு
எமது வாழ்த்துக்கள்

## கல்யாணி
### தங்க மாளிகை
(அன்ரன்லக்ஷா)

189A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-8671)

---

## 6-ம் மாத நினைவஞ்சலி



பிறப்பு
16-09-1967

இறப்பு
24-09-1993

தவசி ஜெயராசா

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
28 - 6 - 1923

மறைவு:
18 - 2 - 1993

### இராமையா நாகரட்ணம்
(காளிராஜா)
(எழுதுவினைஞர்)

எம் பாசமலர் ஐயாவே
நீங்கள் எம்மைப் பாசமுடன்
வளர்த்துப் பாதியிலே எம்மைத்
தவிக்கவிட்டுப் பாரினிலே சென்றதன்
மாயம் என்ன? ஐயா நீங்கள்
எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டுகாலம்
ஆனாலும் உங்கள் நினைவு எம்மனதை
விட்டகலாது.

உங்கள் பிரிவால் நிலை தடுமாறித் தத்தளிக்கும்

திருமதி R. நாகரட்ணம் — ஞானதாஸ் குடும்பத்தினர்.
'சரஸ்வதி பவனம்.' — (அன்பு மகன்)
மட்டுவில் தெற்கு, — பூபாலச்சந்திரன் குடும்பத்தினர்.
சாவகச்சேரி.
(7564)

---

## 45-ம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு:
6 - 3 - 74

நாடவும். காருண்யா சைனீஸ் ஹோட்டல், இல. 166, 1-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். வேம்படி பாடசாலை முன்பாக. (7560)

### கோழி குஞ்சுகள் விற்பனைக்கு

Hy-Line Brown, Hy Line-White கைலைன் பிறவுண், கைலைன் வெள்ளை பேட்டு குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு 999 வெளிநாட்டு மீன் தூள் உடன் விற்பனைக்குண்டு, மற்றும் 21-2-94 கோல்டன் கொமட் பேட்டு குஞ்சுகள் பெற்றுக் கொள்ளலாம் ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய் (7567)

### றெனி மூக்குக் கண்ணாடி அகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்துக் கண்ணாடி உடன் வழங்கப்படும். இல. 288, நாவலர் வீதி, (யாழ். தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம். (7547)

### காணவில்லை

ஜேர்மன் இனத்தைச் சேர்ந்த அல்சேஷன் நாய் (வயது 4) மதிக்கத்தக்கது. கறுப்பும் மஞ்சள் கலந்த நிறம் 18-02-1994 இல் இருந்து காணவில்லை. இது தொடர்பாக ஆ. விஸ்வலிங்கம், 235, கச்சேரி - நல்லூர் வீதி, நல்லூர் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் தரப்படும். (7572)

### வெளி வந்துவிட்டது

சமூகக்கல்வி துரித மீட்டலுக்கான வினா விடை ஆண்டு 9. ஆக்கம்:- க. சந்திரசேகரம் ஏக விநியோகஸ்தர்கள்:-(1) சோதி புத்தகசாலை கச்சாய் வீதி, சாவகச்சேரி, (2) ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன் துறைச்சாலை யாழ்ப்பாணம். (7528)

### தேவை

வீடியோடெக், கலர் தொலைக்காட்சிப் பெட்டிகள், கசற்செற் வகைகள், மைக் மற்றும் எலத்திரனியல் பொருள்கள் நல்ல விலை கொடுத்து வாங்கப்படும். தொடர்பு: மின்வலம் இல. 81 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி8638)

---

**யாழ். றியோன்ஸ் சுவீற்ஸ்**
**அன் கிறீம் ஹவுஸ்**
352, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8571)

---

இவரின் அந்தியேட்டி அழைப்பு இன்று (20-02-94) இவரின் வீட்டில் நடைபெறும். மதிய போசனத்தில் சகபோராளிகளையும் நண்பர்களையும் அழைக்கின்றோம்.


உன் பிரிவால் வாடும்

சிறுப்பிட்டி தெற்கு, **தந்தை: நல்லான் தவசி,**
மிதியங்காடு, **தாய்: பாக்கியம்**
நீர்வேலி. **சகோதரன்: சற்குணராசா**
(7552) **சகோதரி: இராசேந்தினி.**

---



உங்கள் சைக்கிள் தேவைகளுக்கோர்
வசந்தம் வழங்குகிறது



## சேது சைக்கிள் ஸ்ரோர்ஸ்



அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்களுக்கு

**ஓர் நற்செய்தி!**

மங்களகரமான ஸ்ரீமுக ஆண்டு மாசி 11-ம் திகதி (23-02-1994) புதன்கிழமை முற்பகல் 11.30 மணிமுதல் 12.30 மணிவரையுள்ள சுபவேளையில்

## மங்களகரமான திறப்புவிழா

நடைபெறவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

உங்கள் சைக்கிள் தேவைகள் எவையானாலும் நின்று நிதானித்து நியாய விலையில் பெற

**புதுப்பொலிவுடன் உங்களை அழைக்கின்றான்**

சிவன்கோவில் முன்பாக,

## சேது சைக்கிள் ஸ்ரோர்ஸ்

**இல. 356, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

(சி-8665)

---



வீரச்சாவு:
05 - 1 - 94

## லெப். தேவன்

**செ. சந்திரலிங்கம்**

காலங்கள் அழிந்தாலும்
உன் நினைவுகள் அழிவதில்லை

20 - 2 - 94 இன்று நடைபெறும் நினைவஞ்சலி நிகழ்வில் சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாகர் கோவில் -தேவன் குடும்பத்தினர்
ஆழியவளை முகாம். (7525)

---

## நினைவு கூருகின்றோம்..
## 1994. 02. 20

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டு-மண்டூர், பாலமுனைப்பகுதியிற் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**அருட்செல்வம்** (சங்கரப்பிள்ளை அருட்செல்வம் -பாலமுனை, மண்டூர் - மட்டு)

அம்பாறை - தங்கவேலாயுதபுரம் - உடும்பன்குளம் பகுதிகளில் வயலில் வேலைசெய்து கொண்டிருந்த போது சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டு, எரிக்கப்பட்ட 106 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு தேசவிரோதக் குழுவினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**பாண்டியன்** (அருள் டேவிட் - தாழங்குடா -மட்டு)

1989ஆம்ஆண்டு - மட்டக்களப்பில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 04 தமிழர்கள்- கோட்டைக்கல்லாற்றுப் பகுதியில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

யாழ் - நல்லூர் பகுதியிற் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1990 ஆம் ஆண்டு அம்பாறை-மல்வத்தைப் பகுதியிற் போர் நிறுத்த காலத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் கைதுசெய்ய முயன்றபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். தரணி** (கிருஷ்ணபிள்ளை கந்தலிங்கம் -கிரான் - மட்டு)

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**
**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(இ- 8667)

நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

நியாயமாக மனிதர் செய்யக் கூடியது அனைத்தையும் அவர்கள் செய்வார்கள் என்று எதிர்பார்ப்பது அறிவீனம்.

-- ரிச்சர்ட் வேட்லி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 20-02-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

## அரசின் வர்த்தகமும் அதிகாரிகளின் மழுப்பலும்

பொருளாதாரத் தடை, எரிபொருள் தடை, கடல் வலயத் தடைச்சட்டம் என்பனவற்றால் ஏற்கனவே தமிழ் மக்கள் ஒரு பொருளாதார முற்றுகைக்கு உள்ளாகியுள்ளனர். இதன் காரணமாக விலைவாசி ஏற்றம், தொழில் இழப்பு, போக்குவரத்து நெருக்கடி எனத் தமிழ் மக்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர். அரசு என்ற ரீதியில் தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டிய சேவையை அரசாங்கம் வழங்காததோடு, மறுவளமாக அதற்குத் தடைகளையும், கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்தவகையில் மேலும் ஒரு பெரும் சுமையை அரசாங்கம் தமிழ் மக்கள்மீது ஏற்ற முடிவு செய்துள்ளது. கொழும்பிலிருந்து அனுப்பப்படும் அத்தியாவசிய பொருட்களுக்கான கப்பற் கட்டணத்தை அரச அதிபரே பொறுப்பேற்க வேண்டும் என்பதே இவ் அறிவிப்பாகும்.

அரசாங்கத்தின் இந்நடவடிக்கையானது, பொருளாதார ரீதியில் தமிழ்மக்கள்மீது நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தும் திட்டமிட்ட ஒரு சதி நடவடிக்கையாகும். அரச அதிபரே கப்பலுக்கான கட்டணம் செலுத்த வேண்டும் என்பது தமிழ்மக்களே கட்டணங்களைச் செலுத்த வேண்டும் என்ற மறைமுகமான அறிவிப்பே ஆகும். அவ்வாறு இல்லையானால் கப்பல் கட்டணத்தைச் செலுத்தும் தொகையை அரச அதிபர் எங்கிருந்து பணம்

# புதிதாக அனுமதிபெறும் மாணவருக்கு மே மாதத்தில் ஆங்கில வகுப்புகள்

### பல்கலைக்கழக ஆணைக்குழு அதிகாரி தெரிவிப்பு

1992 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதிக்கு தெரிவாகும் வைத்திய, பொறியியல்துறை மாணவருக்கான வகுப்புகள் மூன்று மாதங்கள் முன்னதாகவே இந்த வருடம் அக்டோபர் மாதம் ஆரம்பமாகும் என்று பல்கலைக்கழக ஆணைக்குழுவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். ஏனைய துறைகளைச்சேர்ந்த மாணவருக்கான வகுப்புகள் வழமைபோல் 1995 ஜனவரி நடுப்பகுதியிலேயே ஆரம்பமாகும் என்றார் அவர்.

முன்னைய வருடத்தைப் போலவே இந்தமுறையும் சுமார் 8500 மாணவ மாணவியரே பல்கலைக் கழகத்துக்கு அனுமதிக்கப்படவிருக்கின்றார்கள் என்றும் இத் தொகையை நூற்றுக்கணக்கில் அதிகரிக்க முடியாது இருப்பதாகவும் கூறப்படுகிறது.

பல்கலைக்கழக அனுமதித் தொகையை அதிகரிக்க வேண்டுமென்று பல்வேறு கோரிக்கைகள் கிடைத்துள்ளபோதிலும் இடவசதி, நிதி நெருக்கடி காரணமாக உடனடியாக இது சாத்தியமாவது கஷ்டம் என்றும் அவர் விளக்கமளித்துள்ளார். அக்டோபரில் ஆரம்பமாகும் மருத்துவ, பொறியியல் துறைகளுக்கு மொத்தம் 1443 பேர் தெரிவு செய்யப்படுவார்கள். இவர்களில் மருத்துவ பீடத்திற்கு 823 பேர் தெரிவாகவுள்ளனர்.

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி விபரங்கள் மார்ச் மாதம் முதல் வாரமளவில் வெளியிடப்படும் என ஏற்கனவே செய்தி வெளியானது தெரிந்ததே. இது இம்மாத நடுப்பகுதியில் வெளியிடுவதில் சில நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டதே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அக்டோபர் மாதத்தில் தொடங்கவிருக்கும் மருத்துவ பொறியியல்பீட மாணவருக்கான ஆங்கில வகுப்புகள் எதிர்வரும் மே மாதமளவில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பல்கலைக்கழகங்களுக்கு இம்முறை தெரிவாகவிருக்கும் உத்தேச மாணவர் தொகையும் பீடங்களும் வருமாறு:

மருத்துவம் 823, பொறியியல் 620, உயிரியல் விஞ்ஞானம் 650, பௌதிக விஞ்ஞானம் 1200, கலைப் பிரிவு 2800, மிருகவியல் 65, பல் வைத்தியத்துறை 75, விவசாயம் 320, சட்டம் 200, முகாமைத்துவம் 620, வர்த்தகம் 780.

## முறைசாராக் கல்விக்கு ஆசிரிய ஆலோசகர் பதவி

### மாகாண கல்வி அமைச்சு பணிப்பு

(நல்லூர்)

முறைசாராக் கல்விச் செயற்திட்டங்களை கோட்ட ரீதியாக துரித கதியில் செயற்படுத்தும் நோக்குடன் கோட்டத்துக்கு ஒருவர் என்ற ரீதியில் ஆசிரிய ஆலோசகர்களை நியமிக்குமாறு வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சு சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கும் கடிதம்மூலம் பணித்துள்ளது. இவர்கள் நியமிக்கப்பட்டதும் இவர்களுக்கு முறைசாராக் கல்விச் செயற்திட்டங்களில் பயிற்சி அளிக்கப்பட உள்ளார்கள்.

இவ்வாறு நியமிக்கப்படும் ஆசிரிய ஆலோசகர்கள் ஐந்து வருடத்துக்கு மேற்பட்ட கற்பித்தல் அனுபவத்துடன் கல்வி டிப்ளோமாவுடன் கூடிய பட்டதாரிகள் அல்லது பத்து வருட கற்பித்தல் அனுபவமுள்ள பயிற்சி பெற்ற ஆசிரியர். இவர்களில் ஒன்றை உடையவராக இருத்தல் வேண்டும்.

இவர்கள் எழுத்துப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு நேர்முகப்பரீட்சையின் பின் தகுதியானவர் தெரிவு செய்யப்படல் வேண்டும். இவ்வாறு தெரிவு செய்யப்படும் ஆசிரிய ஆலோசகரின் பெயரை கல்வி அமைச்சின் முறைசாராக்கல்விப் பிரிவுக்கு அனுப்பி வைப்பதுடன் இதன் பிரதியை தமக்கு அனுப்பி வைக்குமாறும் வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சு கோரிக்கைவிடுத்துள்ளது.

## தொழுநோய் ஆய்வும் பரிசோதனையும்

(யாழ்ப்பாணம்)

கைதடி நுணாவில் பிரதேசத்தில் தொழுநோய் ஆய்வும்வைத்தியபரிசோதனையும் நாளை திங்கள் காலை 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது. சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சிவபாதம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். பிராந்திய சுகாதார பணிப்பாளர் பணிமனையில் இருந்து யாழ். மாவட்ட தொழுநோய் தடுப்பு உத்தியோகத்தர் மு. குணரட்ணம்

காமினி போன்றோர் இணைக்கப்பட்டால்

## ஐ.தே.க. தோல்வியடைவதை எவரும் தடுக்க முடியாது

(கொழும்பு)

ஐக்கிய தேசியககட்சிக்குள் தற்போது நிலவுகின்ற அதிருப்தியும் குழப்பநிலையும் தொடருமானால் எதிர்வரும் தென்மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி படுதோல்வியைச் சந்திக்கும் என தென்மாகாணத்தைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் கூறினார்.

தனது பெயரைக் குறிப்பிட விரும்பாதஅமைச்சர், "ஐக்கியதேசியக்கட்சியைக் குழப்பிக்கொண்டுசென்றவர்களும் மேடைக்கு மேடை கட்சியைத் தூற்றியவர்களும்திரும்பவும் கட்சிக்குள் சேர்த்துக் கொள்ளப்படும்போது இவர்களால் கூறப்பட்ட அவதூறுகள் மத்தியிலும் கட்சியைக் கட்டி வளர்த்தவர்கள் பலர் முடக்கப்படுகின்றனர்"

"இந்நிலை தொடருமானால் கட்சியிலிருந்து பலர் வெளியேறுவதைத் தடுக்க முடியாது என்பதுடன் எதிர்வரும் தென்மாகாண சபைத் தேர்தலில் கட்சி படுதோல்வியைச் சந்திப்பதைத் தடுக்க முடியாது என்றார்.

## றப்பர் மரதோட்டத்தில் வெடிகுண்டுப் பொதி

மத்திய மாகாணத்திலுள்ள இறப்பர் தோட்டமொன்றில் வெடிமருந்துகள், பெண்களுக்கான சீருடைகள் என்பனவற்றைக்கொண்டபொதியொன்றை கண்டுபிடித்துள்ளதாக சிறிலங்கா பொலிசார் கூறுகின்றனர்.

இப்பொதி இறப்பர் மரங்கள் மத்தியில் மறைத்து வைக்கப் பட்டிருந்ததாகவும் இது குறித்து எவரும் கைதாகவில்லை எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## முல்லை. கடற்பரப்பில் மீனவர் கடற்படையால் கைது

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மீனவர் ஒருவரைக் கைது செய்துள்ளனர். இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆசீர்வாதம் (வயது 28) என்பவரையே கைது செய்துள்ளனர்.

மேலும் ஒரு மீனவர் கடற்படையினரின்துப்பாக்கிச் சூட்டிலிருந்து தப்பிக்கரை சேர்ந்தார். இவர்களது மீன்பிடிப் படகும் கடற்படையினரின் படகால் மோதிச் சேதமாக்கப்பட்டது.

## கடிதங்களில் நாணயநோட்டு அனுப்ப வேண்டாம்

(நமது நிருபர்)

யாழ். மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கப்படும் தபால்களுள் கரன்சி நோட்டுக்களைவைத்து அனுப்ப வேண்டாம் என வடமாகாண அஞ்சல் அதிபர் நாயகம் எஸ் எம் சேதுகாவலர் தெரிவித்தார்.

இதற்குப் பதிலாக தபால்களுக்குள் செக், றாப் மற்றும் மணியோடர் போன்ற பணத் ... அனுப்பி

கல்விவளர்ச்சிக்கழக

பெறுவது? யார் கொடுப்பது? அரச அதிபர் என்ன நிர்வாக அதிகாரியா? அல்லது சிறிலங்கா அரசின் வர்த்தக முகவரா?

சிறிலங்கா அரசாங்கம் முன்னரே பெயரளவில்தான் அத்தியாவசியப் பொருள்களை வடபகுதிக்கு விநியோகிக்கின்றது. ஏனெனில், வடபகுதியைப் பொறுத்து அரசாங்கத்திடம் இருந்து அத்தியாவசியப் பொருள்கள் கேட்டுப் பெறப்படுகின்றதேஒழிய அது விநியோகிப்பது என்பதல்ல. அதிலும் பெரும்பாலானவற்றின்செலவீடும் வழங்கப்பட்டே பெறப்படுகின்றது.

அதாவது, அரசாங்கம் ஒரு வியாபாரியைப்போல் நடந்து கொள்கின்றதே ஒழிய, அரசுக்குரிய ரீதியில் நடந்து கொள்ளவில்லை. கடனடிப்படையில் பொருள்களை வழங்கியது மட்டுமே கடந்தகாலத்தில் அது செய்து வந்த சேவையாக இருந்தது. ஆனால், அதுவும் தற்பொழுது தடைப்பட்டுப் போயுள்ளது. கடந்த வாரம் உணவுப் பொருள்களுக்கு முன்கூட்டியே பணம் செலுத்த வேண்டும் என நிதியமைச்சின் செயலாளர் அறிவித்திருந்தமை இதற்கும் முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

இந்நிலையில், கப்பற் கட்டணமும் செலுத்துமாறு அரசாங்கம் நிர்ப்பந்திப்பதென்பது, தமிழர் விவகாரத்தில் கடன் கொடுக்காத ஒரு வியாபாரியின் நிலைப்பாட்டை அரசாங்கம் எடுத்துள்ளதையே காட்டுவதாகவுள்ளது. ஆனால், இது ஒரு பிரதேசத்தைத் தனது நாடு எனக் கூறிக்கொள்ளும் ஒரு அரசாங்கம் கடைப்பிடிக்கக் கூடிய கொள்கையல்ல. இது நாடுகளுக்கு இடையிலான- அவையும் சில ஒப்பந்தங்கள் மூலம் தவிர்க்கப்படுவதுண்டு - வர்த்தகத்திற்கு ஒப்பானதாகும்.

ஆனால், சிறிலங்கா அரசாங்கத்தின் இவ்வாறான நடவடிக்கைகளை இங்குள்ள அரச அதிகாரிகள் சில அறிவிப்புகளுடன் நிறுத்திக் கொள்வது அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு அவர்களும் ஒப்புதல் கொடுப்பதற்கு ஒப்பானதே ஆகும். அதாவது, சிறிலங்கா அரசாங்கம் தமிழ்மக்களுடன் வியாபாரம் செய்ய முற்படுகின்றதே ஒழிய சிறிலங்காவின் மக்களாக அவர்களை கருதிச் செயற்படவில்லை என்பதை அரச அதிகாரிகள் பொதுவாக மறைத்தே வருகின்றனர்.

கொழும்பில் மண்ணெண்ணெய் லீற்றர் 11.58 சதம் விற்கும்போது, யாழ்ப்பாணத்தில், அரச செயலகத்தால் விநியோகிக்கப்படும் மண்ணெண்ணெய்25ரூபாவாக விற்கப்படுகின்றது. இவ் விலையேற்றம் ஏன்? அரசு தமிழ் மக்களிடம் வியாபாரிகள் போன்று நடந்து கொள்வதினாலேயே ஆகும். இதே போன்றே ஏனைய அத்தியாவசிய பொருள்களையும் செயலகம்ஊடாக இவ்வாறே விற்பனவு செய்கின்றது. ஆனால், அரசாங்க அதிகாரிகள் அதனை விநியோகம் என்று காட்ட முற்படுகின்றமை தவறாகும். இது வியாபாரமே. தனியார் வர்த்தகரின் நடவடிக்கைக்கும் அரசிற்கும் எதுவித வேறுபாடும் இல்லை என்பதே உண்மையாகும்.

ஆனால், சிறிலங்கா அரசாங்கம் அத்தியாவசிய பொருள் விநியோகத்தை அந்நியருடன் மேற்கொள்ளும் வர்த்தக உறவு போன்று கடைப்பிடிக்க விரும்பினால் அதற்கு முன் ஒன்றைச் செய்ய வேண்டும். தமிழரின் தாயகத்தில் இருந்து தனது நிர்வாக அலகுகளை விலக்கி விட்டு, வர்த்தக மையங்களை அமைக்க வேண்டும். அரச அதிபருக்குப் பதில், வியாபார முகாமையாளரை நியமிக்கவேண்டும். அரசஅதிகாரிகளும் தமதுசெயற்பாட்டை மக்களுக்குத் தெளிவாகக் கூறிவிட வேண்டும்.

# வைத்தியர் பற்றாக்குறை நோயாளர் அவதி

(கொழும்புத்துறை)

வட்டுக்கோட்டை மத்திய கிராமிய அரசினர் வைத்திய சாலையில் ஒரே ஒரு வைத்திய அதிகாரி மட்டுமே கடமை ஆற்றி வருகின்றார். இதனால் இங்கு சிகிச்சை பெற வரும் நோயாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இங்கு வார்ட்டுகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்கள், மற்றும் வெளி நோயாளர்கள் சகலரையும் இந்த ஒரு வைத்திய அதிகாரியே பெரும் வேலைப் பளுவின் மத்தியில் மிக்க சிரமத்துடன் கவனித்து வருகிறார்.

இந்த வைத்திய அதிகாரி தமது சொந்த மிக அவசரத் தேவைகளுக்காக விடுமுறையில் செல்லும் போது வெளி நோயாளர்களும் இங்கு வார்ட்டுகளில் தங்கியிருந்து சிகிச்சைபெறும் நோயாளர்களும் பல இன்னல்களுக்கு மத்தியில் நிர்க்கதி நிலைக்கு ஆளாகியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (24)

# 'சேவாவனிதா' வாகனங்கள் அநாதரவாக விடப்பட்டன

(கொழும்பு)

சேவா வனிதா இயக்கத்திற்கு சொந்தமான நான்கு வாகனங்கள் நள்ளிரவு நேரத்தில் கொழும்பில் இயக்க அலுவலகம் அமைந்துள்ள வீதியில் அநாதரவாக விடப்பட்டுள்ளன.

ஆடம்பரமான லக்சறிமினி பஸ் ஒன்றும், மூன்று ஆடம்பர கார்களும் நள்ளிரவு வேளையில் கொண்டுவரப்பட்டு இயக்க அலுவலகம் முன் உள்ள வீதியில் நிறுத்தப்பட்ட பின் அவற்றின் திறப்புக்கோர்வைகளை, வாசலில் இருந்த பாதுகாப்பு ஊழியரிடம் கையளித்த சாரதிகள் ஐந்தாவது வாகனமொன்றில் தப்பிச்சென்றுள்ளனர்.

வெளிநாடொன்றின் நன்கொடைகளாக வழங்கப்பட்ட இவ்வாகனங்கள் காணாமற் போயிருப்பதாகவும் இவற்றை கண்டுபிடிக்க புலனாய்வு பொலிசாரின் உதவி நாடப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வெளியாகி இருந்தது தெரிந்ததே.

கொண்டுவந்துவிடப்பட்ட இந்த வாகனங்கள் மிகவும் மோசமான நிலையில் பராமரிக்கப்பட்டு இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. புலனாய்வு பொலிசார் தமது பணியைஆரம்பிப்பதற்கு முன்பாகவே இரு வாகனங்கள் கொண்டு வந்து விடப்பட்டுள்ளபோதும் இதனைப் பாவித்தவர்களை அடையாளங் காண்பதில் புலனாய்வுபொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

## உதைபந்தாட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி உதைபந்தாட்டச் சங்கம் அமரர் வி. கே. ஆறுமுகம் நினைவாக வெற்றிக்கிண்ண இறுதிப்போட்டியை எதிர்வரும 25ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில்நடாத்தவுள்ளது.

இவ் இறுதிப்போட்டியில் வல்வை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவசக்தி விளையாட்டுக்கழகம் மோதும் (யோ)

## சிறுதானிய கொள்வனவு

யாழ். மாவட்டத்தில் சிறுதானிய உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளின் நன்மை கருதி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமானது விளைபொருட்களான எள்ளு, உழுந்து, கௌபி, பயறு சோளம் ஆகிய தானியங்களை உற்பத்தியாளர்களிடம் இருந்து கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளது.

இச் சிறுதானிய உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருள்களை வட்டத் தொடர்பாளர் காரியாலயங்களிலும், உதயம் பல்பொருள் அங்காடியிலும், கோண்டாவில் பசுமை விவசாய சேவை நிலையத்திலும் வைத்துக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யோகத்தர் மு. குணரட்ணம் அவர்களும் அப்பகுதி சுகாதார பரிசோதகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (சி)

## கருத்தரங்கும் பாராட்டும்

(வடமராட்சி)

ஹாட்லிக்கல்லூரியில் பழைய மாணவர் மன்றத்தால் பழைய மாணவர் சங்கத்தலைவர் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. டி. ஆர். அருமைநாயகம் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு பூரணம்பிள்ளை மண்டபத்தில் கல்விசார் கருத்தரங்கு ஒன்று நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வைபவத்தில் வடமராட்சியில் உள்ள சகல கல்லூரிகளைச் சேர்ந்த கல்விமான்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் பலரும் அழைக்கப்படுகின்றனர்.

அன்று யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களுக்கு பழைய மாணவர்களினால் பிற்பகல் 3.00மணிக்கு அவரை கௌரவித்து விழா ஒன்றை நடாத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (யோ)

## ஏற்பாட்டில் இலவச வகுப்புகள்

(தொல்புரம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினால் நடாத்தப்படும் கட்டுடை மேஜர் சுபாஸ் சனசமூக நிலையத்தில் இயங்கும் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் இலவசகல்வி வகுப்புகள் பெருவளர்ச்சி கண்டுள்ளன.

மேற்படி இலவச வகுப்புகளில் பகல் வேளைகளில் ஆண்டு 1 முதல் ஆண்டு 11 வரையிலான மாணவமாணவியருக்கு திறமைமிக்க ஆசிரியர்களால் சேவை அடிப்படையில் கல்வி கற்பிக்கப்படுகின்றன. இரவு வேளைகளில் பெற்றோமாக்ஸ் லாம்பு வெளிச்ச வசதியுடன் மீட்டல் (சுயகல்வி) வகுப்புக்களும் நடைபெறுகின்றன. மேலும் சுமார் 200க்கும் மேற்பட்ட வறிய மாணவர்கள் மேற்படி வகுப்புகளில் பயனடைந்து வருவதோடு, இரவு வேளைகளில் பிரத்தியேக ஆங்கில வகுப்பும் நடாத்தப்பட்டு அவ் வகுப்புகளில் சிறியோர் முதல் முதியோர்வரை சிறந்த முறையில் கற்று வருகின்றனர் எனகழகப்பொறுப்பாளர் க. இராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார். (41)

மணியோடர் போன்றவற்றின் வடிவங்களில் அனுப்பி வைக்குமாறு மக்களிடம் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும்இம்முறை வெளிநாட்டுத் தபால்களுக்கும் பொருத்த முடையது என அவர் நமது நிருபரிடம் தெரிவித்தார். (பா)

## கோழிகளுக்கு தடுப்பூசி ஏற்றல்

கோழிக்கு ஏற்படும் கொள்ளை நோயிலிருந்து அவற்றைப் பாதுகாக்கும் நோக்குடன் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தென்மராட்சிக் கோட்டத்தில் கிராமம்தோறும் மேற்கொண்டு வருகின்றது.

இதன் முதல் கட்ட நடவடிக்கையாக 11-01-94 அன்று சரசாலை மத்தி, சரசாலை வடக்கு, சரசாலை தெற்கு ஆகிய பகுதிகளில் தடுப்பூசி போடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 09 00 மணியளவில் தடுப்பூசி போடும் நடவடிக்கையினை தென்மராட்சிக் கோட்ட செயலக விலங்கு வேளாண்மைப் பகுதியினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ் குடா தபால் சேவை கவலையுறும் அளவில் சீர்குலைவு?

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில்தபால் சேவை கவலைப்படத்தக்க அளவு சீர்குலைந்துள்ளது. சென்றமுறை ஒக்டோபர் 16, 93 முதல் ஜனவரி 28,1994 வரை வெளியூர்த் தபால்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. பின்னர் கொழும்பில் தேங்கிக்கிடந்த கடிதங்களில் ஒரு பகுதி மாத்திரமே இங்கு அனுப்பப்பட்டது. அதுவும் கடித உறைகள் உடைக்கப்பட்டு கடிதங்கள் மாறிச் செருகப்பட்டுள்ளன. மேலும் நத்தார் வாழ்த்து மடல்களில் உள்ள படங்கள் கிழிக்கப்பட்டும்பின் அட்டைகள் தான் மிஞ்சியுள்ளன. இவ்வாறு கடந்த மூன்றரை வருடங்கள் நடைபெறுகின்றது. தொடர்புத் துறைகள் வளர்ச்சி காரணமாக 'உலகம் கிராமமாக' சுருங்கியுள்ள வேளையில் யாழ்ப்பாணமக்களுக்குப் பல மாதங்களாகக் குறைந்தபட்சத் தொடர்புச்சேவை கூட மறுக்கப்பட்டுள்ளது இவ்வாறுநற் சமூக நடுநிலையச்செயலர் ஏ. சந்தியாபபிள்ளை ஜனாதிபதி டி பி விஜேதுங்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் —

பருவ இதழ்கள், விளம்பரங்கள் மற்றும் அரசவர்த்தமானி ஒழுங்காகக் கிடைக்கப் பெறாததால் இப்பகுதி மக்களின்கல்வி மற்றும்வேலை வாய்ப்புகளும் தடைப்படுகின்றன. வெளிநாடுகளில்உழைப்பவர்களின் பணத்தை எதிர்பார்த்து இருப்பவர்களின் வருவாய் மூலங்களும் இதனால் தடைப்பட்டுள்ளன.

சர்வதேச தபால் சேவை அமைப்புடன் சிறிலங்கா அரசு செய்து கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் கடிதங்களைச் சேர்ப்பதும் விநியோகமும் உடன் நடைபெற வேண்டும். இந்தக் கோட்பாடுகளும், கடப்பாடுகளும் யாழ்ப்பாணக் கடிதங்களைப் பொறுத்தவரையில் செயற்படுத்தப்படுவதில்லை. தபால் திணைக்களம் தனது கடமைகளை இராணுவத்துக்குக் கையளித்து விட்டது போல் தோன்றுகிறது என்றும்-

பாதுகாப்புக் காரணங்களுக்காகக் கடிதங்களை உடைத்துப் பார்க்க வேண்டியதில்லை. மின்னியக்க சாதனங்களைக் கொண்டே கடிதங்களை பரிசிலிக்கலாம். கடிதங்களை உடைத்துப் பார்ப்பது அடிப்படை உரிமைகளுக்காக இரங்கி நிற்கும் மக்களைப் பழிவாங்கும் நடவடிக்கையாகும். இப்படியாக மக்கள் தொடர்ந்து நடத்தப்பட்டால், இப்பகுதி மக்கள் அந்நியர்களாகவே நடத்தப்படுவதாக கருதவேண்டி ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை
இளங்கலைஞர் மன்றத்தின்

## 14-வது இசைவிழா

### 9-ம் நாள் 20-2-94

### ஞாயிற்றுக்கிழமை

தியாகராஜ உற்சவம்

**வடமாகாண தெ. ப. வ- அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் ஆதரவில்**

காலை

**9-00 - 10-30 மங்கள இசை**

கே. ஆர். சுந்தரமூர்த்தி )
எஸ். எஸ், சிதம்பரநாதன் )
வி. கே. நம்பிராஜன் ) நாதஸ்வரம்
ஆர். கேதீஸ்வரன் )
ஆர். எஸ். ரஜீந்திரன் )

என். கே. வீரசாமி )
ரி. உதயசங்கர் )
கே. சிவகுமார் )
என். ஜெயராமன் ) தவில்
எஸ். ராமதாஸ் )
பி. எஸ். ரவீந்திரன் )

**10-30 - 11-00 மங்கள விளக்கேற்றல்**

திரு. சி. கந்தசாமி (தலைவர், வலி. கொத்தணி)
திரு. சி. வேலாயுதபிள்ளை (தலைவர், யாழ். கொத்தணி)
திரு. தே. அந்தோனிப்பிள்ளை, (தலைவர், வடமராட்சி கொத்தணி)
திரு. அ. சிவசுப்பிரமணியம் (தலைவர், தென்மராட்சிக் கொத்தணி)
தலைவர்: திரு. கி. சிவநேசன் (பொதுமுகாமையாளர் ப. தெ. வ. அ. கூ. ச. சமாசம்)
பிரதம விருந்தினர்: திரு. இ. வெங்கட்ராமன் (பொது முகாமையாளர் வர்த்தக வங்கி)
சிறப்பு விருந்தினர்: திரு. சா. செல்வரத்தினம், (தலைவர், ப. தெ. வ. அ. கூ. ச. சமாசம்)

**11.00 - 11.45 பாட்டு**

ஞானகுமாரி சிவநேசன் - பாட்டு
பாக்கியலட்சுமி நடராஜா - வயலின்
எஸ். துரைராஜா - மிருதங்கம்

**11.45 - 12.30 பாட்டு**

வீ. செல்லத்துரை - பாட்டு
எஸ். வெங்கடேஸ்வர சர்மா - வயலின்
எஸ். பாலச்சந்திர சர்மா - மிருதங்கம்

**12 30 - 2.00 மதிய போசனம்**

(உபயம்: திருப்பதி ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்)


# சிறிலங்கா கடற்படை தாக்குதல் இரு தமிழக மீனவர்கள் பலி

(சென்னை)

இந்திய மீனவர்கள்மீது சிறிலங்கா கடற்படை மீண்டும் நேற்று நடத்திய தாக்குதலில் இரு மீனவர்கள் பலியாகினர். இச்சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

கச்சதீவு அருகே கட்டுமரம் ஒன்றில் மீன்பிடித்துக்கொண்டிருந்த இம்மீனவர்கள்மீது சிறிலங்கா கடற்படை நடத்திய தாக்குதலில் இரு தமிழக மீனவர்கள் பலியாகினர். மற்றுமொரு மீனவர் காயமடைந்தார்.

## உயர்தர வகுப்பு பெறுபேறு குறித்து ஆராய கருத்தரங்கு

(வடமராட்சி)

ஹாட்லிக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் சார்பாக ஒரு கருத்தரங்கு இன்று காலை 9.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட க. பொ. த. உயர்தர மாணவர்களின் பெறுபேறுகளின் அண்மைக்காலத் தேக்கநிலைக்கான காரணங்களை அறியுமுகமாக இக்கருத்தரங்கு அமைகிறது.

இக்கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. அ. துரைராசா, யாழ். மாவட்ட வலயக் கல்விப்பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், கல்வி மேம்பாட்டுக் கழக பொறுப்பாளர்கள், வடமராட்சியில் உள்ள முன்னணிப் பாடசாலை அதிபர்கள், உயர்தர வகுப்புகளில் கல்வி போதிக்கும் ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொள்வர்.

மற்றும் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. அ. துரைராசா அவர்களைக் கௌரவித்து பாராட்டு விழா ஒன்றும் இக்கல்லூரி மண்டபத்தில் மாலை 3-00மணிக்கு பழைய மாணவர் சங்கத் தலைவர் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. டி, ஆர். அருமைநாயகம் தலைமையில் நடைபெறும். (யோ)

## மீனவர் ஒருவரின் சடலம் மணற்காடு பகுதியில் மீட்பு

மணற்காடு கடற்கரைப் பகுதியில் இருந்து மீனவர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை மணற்காடு கடற்பரப்பில் வைத்து சிறிலங்கா கடற்படையினரின் பீரங்கித் தாக்குதலுக்கு இலக்காகி பலியான தியோகுப்பிள்ளை- ஞானரட்ணம் என்பவரின் சடலமே மீட்கப்பட்டது.

மணற்காடு பகுதியைச் சேர்ந்தவர்களால் இச்சடலம் காணப்பட்டு பின்னர் முனையில் உள்ள அவர்களது குடும்பத்தினருக்குத் தெரியப்படுத்தப்பட்டு உறவினர்களால் மேறபடி சடலம் அடையாளம் காணப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது.

இச்சடலத்தில் சூட்டுக்காயங்கள் இருக்கக் காணப்பட்டது. (யோ)

### புலிகளுக்கு

அவதானிக்கப்பட்ட பின்பே விமானத் தாக்குதல் நடத்தப்படும். அண்மைய நாட்களில் வடபகுதியில் இரு புதிய நடவடிக்கைகளை விமானப் படையினர் மேற்கொண்டுள்ளனர் எந்தவொரு நெருக்கடி நிலையையும் சமாளிக்

### நெல் அறுவடை விழா

மறவன்புலோ மத்தி பசுபதி சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்படும் நெல் அறுவடை விழா இன்று முற்பகல் 10-00 மணிக்கு தேசியக் கொடி ஏற்றலுடன் ஆரம்பமாகும்.

### அதிபர்களுக்கான கூட்டம்

சங்கானைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான முக்கிய கூட்டம் ஒன்று நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில், பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

### போட்டி

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் முதல் முறையாக நடாத்தவிருக்கும் மாலை கட்டுதல், கோலம் போடுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயல் முறைப் போட்டிகள் இன்று ஆலய மண்டபத்திலும், அருகில் உள்ள யாழ். வண்ணை. நாவலர் மகா வித்தியாலயத்திலும் காலை 10-00 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் முடிவுற்ற

## தபாலக எழுதுவினைஞர்; நிரந்தர நியமனம்

யாழ். பிரதான தபாலகத்தைச்சேர்ந்த தற்காலிகமாக கடமையாற்றிய எழுதுவினைஞர்கள் அனைவரும் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர் என வடமாகாண அஞ்சல் அதிபர் நாயகம் எஸ். எம். சேதுகாவலர் தெரிவித்தார்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் மிக விரைவில் கிடைக்கப்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார்.


**Modern Education Centre Karaveddy**

O/L (1994) துரித மீட்டல் வகுப்புகள்

ஆரம்பம்: 19 02-1994 (சனி) காலை 9-00

| | |
|---|---|
| 1) கணிதம் | ( திரு. ராமகிருஷ்ணன் (திரு. சிவராஜா |
| 2) தமிழ் | திரு. விசுவாசம் |
| 3) விஞ்ஞானம் | திரு. மகேந்திரம் |
| 4) சமூகக்கல்வி | திரு. சிவநாதன் |
| 5) ஆங்கிலம் | திரு. போஜியார் பிரான்சிஸ் |
| 6) வர்த்தகம் | (திரு. சிவலிங்கம் (திரு. சண் |
| 7) சமயம் | திருமதி மனோன்மணி |

(5872)

## விற்பனைக்கு

1. கைலைன் பிறவுண் 7 நாட் குஞ்சுகள்
2. " " 1மாத "
3. " " 4 " "
4. வான்கோழிகள் 8 மாதம்
5. கோழிப் பண்ணைகளுக்கேற்ற உணவுப் பாத்திரங்கள்.

இறைச்சிக் கோழிப் பண்ணை, திருநெல்வேலி.

(7571)

**45-ம்நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் 20-02-1994**

11.45 - 12.30 பாட்டு
வீ. செல்லத்துரை - பாட்டு
எஸ். வெங்கடேஸ்வர சர்மா - வயலின்
எஸ். பாலச்சந்திர சர்மா - மிருதங்கம்

12 30 - 2.00 மதிய போசனம்
(உபயம்: திருப்பதி ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்)

## தீவகக் கோட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் ஆதரவில்

மாலை

**3.00 - 4 00 மங்களஇசை**
ஏ. முருகானந்தம் ) நாதஸ்வரம்
என். ஆர். சந்தானகிருஷ்ணன் ) ,,
என். ஆர். எஸ். ரவீந்திரன் ) தவில்
என். ஆர். எஸ். சுதாதரன் ) ,,

**4-00 - 4-20 வீணை இசை**
பாமினி தர்மலிங்கம் ) வீணை
ஜெயபாரதி யோகநாதன் ) ,,
எஸ். துரைராசா - மிருதங்கம்

**4.20 - 5-05 பாட்டு**
வீ. கே. நடராசா - பாட்டு
ஆர். எஸ். கேசவமூர்த்தி - வயலின்
எஸ். துரைராசா - மிருதங்கம்

**5.05 – 5-30 வீணைஇசை**
உதயந்தி வாமதேவன் ) வீணை
சுதர்ஷனி காசிவிஸ்வநாதன் ) ,,
எஸ். துரைராசா - மிருதங்கம்

**5-30 - 6-15 பாட்டு**
கே. ராமநாதன் - பாட்டு
எஸ். சர்வேஸ்வர சர்மா - வயலின்
எம். சிதம்பரநாதன் - மிருதங்கம்
எஸ். பாலச்சந்திரசர்மா - கஞ்சிரா

**6-15 - 7-00 வயலின் இசை**
வீ. கே. குமாரசாமி - வயலின்
எம். சிதம்பரநாதன் - மிருதங்கம்
ஏ. செல்வரத்தினம் - கடம்

**7-00 - 7-30 மங்கள விளக்கேற்றல்**
திரு. பொ. மாசிலாமணி (தலைவர், ப. நோ. கூ. ச. வேலணை)
திரு. தி. சுந்தரலிங்கம் (தலைவர், ப, நோ. கூ. ச. (ஊர்காவற்றுறை)
திரு. எஸ். விக்னேஸ்வரன் (தலைவர், ப. நோ. கூ. ச. காரைநகர்)
திரு. எஸ். உலகேஸ்வரன் (வர்த்தகர்)
தலைவர்; திரு. ப. கனகலிங்கம் (தலைவர், ப. நோ. கூ. ச. தீவகம் புங்குடுதீவு, நயினாதீவு)
பிரதம விருந்தினர்; திரு. எஸ். சிவபாலன், மகப்பேற்று நிபுணர் (யாழ். போதனா வைத்தியசாலை)
சிறப்பு விருந்தினர்; வைத்தியக்கலாநிதி எஸ். பி, ஆர். சிர்மாறன், யாழ். பல்கலைக்கழகம்)

**7-30 - 8-15 பாட்டு**
எஸ். கணபதிப்பிள்ளை - பாட்டு
பாக்கியலட்சுமி நடராஜா - வயலின்
எஸ். மகேந்திரன் - மிருதங்கம்
ஏ. செல்வரத்தினம் - கடம்

**8-15 - 9.30 மங்கள இசை**
என். கே. பத்மநாதன் ) நாதஸ்வரம்
வீ. கே. பஞ்சமூர்த்தி )
கே. நித்தியானந்தன் )
ரி. உதயசங்கர் ) தவில்
ஆர். எஸ். சுதாகரன் )
க. சிவகுமார் )

வாழ்த்துவோர்:
**அருண் களஞ்சியம்**
**திருநெல்வேலி சந்தை,**
**திருநெல்வேலி.**

(சி-8668)

---

வரின் சடலமே மீட்கப்பட்டது. மணற்காடு பகுதியைச் சேர்ந்தவர்களால் இச்சடலம் காணப்பட்டு பின்னர் முறையில் உள்ள அவர்களது குடும்பத்தினருக்குத் தெரியப்படு

---

### உணவு

பொருள்களை உடனடியாக குடாநாட்டுக்கு எடுத்து வருவதற்குரிய நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு சாத்தியமான முயற்சிகளை மேற்கொள்வார்.

மேலும் குடா நாட்டுக்கான கப்பல் போக்கு வரத்திலும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்து வருவதிலும் காணப்படும்சில நடைமுறைப்பிரச்சினைகளை நீக்குவதற்குரிய நடவடிக்கையையும் திட்டப்பணிப்பாளர் மேற்கொள்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (க)

---

### சமாதானப்

வேண்டும். மேலும் இந்த சமாதானக் குழுவில் பெரும்பான்மையானவர்கள் அரசியலுடன் தொடர்புடையவர்களாக இருக்க வேண்டும். அரசியல் கட்சித் தலைவர்களும் இதில் உள்ளடங்க வேண்டும்.

இதேவேளை மக்களின் நம்பிக்கையைப் பெற்ற புத்திஜீவிகள், வெளிநாட்டு, உள்நாட்டு சட்டங்களை நன்கு அறிந்த ஒருவர், தேசிய சர்வதேச அரசியலுடன் நன்கு பரிச்சயமான ஒருவர் ஆகியோர் சமாதானக் குழுவிற்கு ஆலோசகர்களாக நியமிக்கப்படவேண்டும். மேலும்சகல மதத்தினரையும் பிரதிநிதித்துவப் படுத்தும் ஒவ்வொரு பிரதிநிதிகளும் கலந்து கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும், தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய புத்திஜீவிகளும் இக் குழுவில் உள்ளடங்கவேண்டும். இவ்வாறானவர்களுக்கிடையே நடைபெறும் பேச்சுவார்த்தையே பயனுள்ளதாக அமையும் என்றார்.

---

### வெளிநாட்டுத்

குறித்து தெரிவிக்கப்பட்டது எனவும் பாதுகாப்பு காரணங்களுக்காக தபால்கள் உடைப்பதை அறவே நிறுத்த முடியாது என அவர்கள் கூறிவிட்டதாகவும் வடமாகாண அஞ்சல் மா அதிபர் நாயகம்தெரிவித்தார். அனைத்து தபால்களையும் உடைக்க வேண்டாம் எனவும் ஒரு சில தபால்களை மட்டும் பரிசீலித்துவிட்டு அனுப்பும்படி தான் கேட்டுக் கொண்ட போது அவர்கள் அதற்கு இணங்கியதாகவும் அஞ்சல் மா அதிபர் நாயகம் தெரிவித்தார். (பா)

---

தப்படும். அண்மைய நாட்களில் வடபகுதியில் இரு புதிய நடவடிக்கைகளை விமானப் படையினர் மேற்கொண்டுள்ளனர் எந்தவொரு நெருக்கடி நிலையையும் சமாளிக்கும் திறனும் போதிய யுத்த தளபாடங்களும் எம்மிடம் உள்ளது எனவும் புதிய விமானப்படைத்தளபதி ஏயர் மார்ஷல் ஒலிவர்ரணசிங்க மேலும் கூறினார்.

விமானப் படையில் இப்பொழுது பதினொரு ஆயிரத்திற்கும் அதிகமானோர் இருக்கிறார்கள். ஆறுமாதத்திற்கு ஒரு தடவை இருநூற்றிஐம்பதுபேரிலிருந்து முன்னூறு பேர்வரை படைக்கு திரட்டப்படுகிறார்கள்.

தியத்தலாவையில் அவர்களுக்கு ஐந்தரை மாத ஆரம்பப் பயிற்சி வழங்கப்படுகிறது. அதன்பின் சீனன்குடா பரவேவ முகாம்களில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மேலதிக பயிற்சிக்காக அவர்களை நாம் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கிறோம்.

விமானப் படையிலிருந்து தப்பியோடுபவர்களின் தொகை மிகவும் குறைவானதாகும். இதுவரை 150பேர் வரை தப்பிச் சென்றுள்ளனர்.

---

லும், அருகில் உள்ள யாழ். வண்ணை. நாவலர் மகா வித்தியாலயத்திலும் காலை 10-00 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் முடிவுற்றதும் பி. ப. 1-00 மணி தொடக்கம் கண்காட்சிக்காக திறந்து வைக்கப்படும்.

---

### அநுராதபுர

வழங்குமிடமாக அநுராதபுரம் காணப்படுவதால், சிகிச்சையினைத் துரிதப்படுத்தவே இந் நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

---

### பின்போடப்பட்டது

யா \ நாயன்மார்கட்டு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தால் மகளிர் அபிவிருத்தி நிதிக்காக 20-2-94 இன்று நடைபெறவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தால் 20-03-94 அன்று நடைபெறும்.

யா / நாயன்மார்கட்டு
மாதர் கிராம
அபிவிருத்திச் சங்கம்

(இ-8673)

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 18.02.1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம் 890

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

42-8316, 42-3945, 41-2979, 26-0882, 24-8632, 26-4058, 41-7563, 43-4045, 42-9326, 26-7353, 27-6415, 24-5529, 42-0849, 26-7227, 24-5967, 24-1685, 24-4992, 27-1122, 24-5137, 26-3722, 24-9856, 26-3177, 24-4490, 26-3294.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

26-4648, 24-6941, 24-0415, 28-4817, 27-9404, 40-4484, 24-4636, 26-1583, 27-6762. 42-3239. 26-0987, 28-6640, 26-6933, 26-0483, 27-5882, 27-1939, 41-9396, 24-6489, 26-1495, 27-7711, 26-1741, 41-9530.

### 19-02-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 898

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-1019, 28-940, 24-2545, 26-6568, 41-6296 24-6699, 26-9130, 42-1750, 26-8051, 41-8617 26-2941, 26-0535, 27-7081, 24-1259, 42-6119 24-0878, 24-6855, 41-2479, 22-8754, 26-6335 41-9895, 41-1665, 26-4450.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்;

22-8777, 42-2355, 43-3854, 26-9201, 28-1798 42-0728, 24-8429, 27-6824, 26-4945, 27-4829 28-8444, 22-4550, 24-7267, 28-1085, 28-4707 22-7271, 41-5015, 26-1609, 27-2088, 42-7975 40-9188.

---

## 45-ம்நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### 20-02-1994



## லெப்டினனட் விடுதலை

### (அன்றாஜ்)

(பரஞ்சோதி சிவநேசன்.)

ஆழியவளை-தாளையடி

| தாயின் மடியில்: | தாயக மண்ணில்: |
|---|---|
| **15.01.1974** | **6.01.1994** |

அன்பின் திருவுருவே பண்பின் இருப்பிடமே
பாசத்தின் பிறப்பிடமே நேசத்தின் நேசனே
தாய் மண்ணை மீட்கவென வேங்கை அணி
சேர்ந்தவனே

தூய தமிழ்காக்க இன்னுயிரை ஈந்தவனே
ஈகை யெனும் சொல்லுக்கு இலக்கணம் வகுத்துவிட்டு
தாய் தந்தை சுற்றத்தை தவிக்கவிட்டு சென்றுவிட்டீர்
நாளை உன் கனவு நனவாகும் என்று எண்ணி
ஆறுதலடைகின்றோம் உன் ஆத்மா சாந்தியடையட்டும்

இன்று (20-02-1994) எமதுஇல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், சக போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உன் நினைவில் வாழும்:

| தற்போதைய முகவரி: | அன்பு அம்மா, |
|---|---|
| தனிப்பனை முகாம், | ஆருயிர் அப்பா, |
| செம்பியன்பற்று வடக்கு, | இனிய சகோதரர்கள், |
| தாளையடி. | ஈடில்லா சுற்றத்தார், |
| (7570) | உயிரொத்த நண்பர்கள். |

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 61-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.